**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம்/சார்பு நீதிமன்றம்**
**பத்மனாபபுரம்**
**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி**

**2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 5–ம் நாள் வெள்ளிக்கிழமை**

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை மனு எண். 7/2021**
**CNR-TNKK07-000435-2020**

ஈசாக்

... மனுதாரர்

/எதிர்/

1.சுரேஷ்

2.மேலாண்மை இயக்குநர்

K.S.RTC Transport bhavan fort

திருவனந்தபுரம்.

3. பிரிவு மேலாளர்

நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நாகர்கோவில்.

... எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது 24.04.2026 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஜெயபிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், 3வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ராஜேஸ்வர் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் ஒருதலைப்படுத்தப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் எனது கவனமான பரிசீலனையின் கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

<u>**உத்தரவு**</u>

மனுதாரர் இம்மனுவை மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(i) ன் கீழ் மனுதாரர் 18.11.2018 அன்று 4.00 மணியளவில் மார்த்தாண்டம் நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலை என்ற இடத்தில் வைத்து நடந்த வாகன விபத்தில் காயமடைந்ததற்கு இழப்பீடாக ரூ.10,00,000/– வழங்குமாறும், மேற்படி தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளில் இருந்து தொகை வசூலாகும் தேதி வரை 12% வருட வட்டி மற்றும் செலவு தொகை கோரியும் தாக்கல் செய்துள்ளார்.

2. <u>**மனுவின் சுருக்கம்**</u>

18.11.2018அன்று காலை சுமார் 4.00 மணியளவில் மார்த்தாண்டம் நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கிலிருநது மேற்காக இடது ஓரமாக மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்த போது மனுதாரருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த கேரள போக்குவரத்து கழகத்திற்கு உரிமைப்பட்ட பேருந்து KL 15 A 1323 ஐ 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் பேருந்து மனுதாரரை இடித்ததால் உடனடியாக மனுதாரரை ரத்னா நினைவு மருத்துவமனை சுவாமியார்மடத்தில் அனுமதித்து முதலுதவி அளித்து பின் சுங்கான்கடையிலுள்ள முத்து நியூரோ மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிட்சை முடிந்து 27.11.2018 அன்று வீடு திரும்பினார். காயங்கள் முழுமையாக குணப்படாததால் மீண்டும் ரத்னா நினைவு மருத்துவமனையில் 28.11.2018 அன்று அனுமதிக்கப்பட்டு 30.11.2018 அன்று விடு திரும்பினார். மீண்டும் அதே நாள் 30.11.2018 அன்று கன்னியாகுமரியில் உள்ள லேடி ஆப் பில்லர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 31.3.2019 அன்று வீடு திரும்பினார். தலையில் ஏற்பட்ட காயம் குணமடையாததால் 23.06.2019 அன்று மீண்டும் லேடி ஆப் பில்லர் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 23.07.2019 அன்று வீடு திரும்பினார். இந்த விபத்திற்கு தக்கலை காவல்நிலைய குற்ற எண். 469/2018 ஆக பதிவு செய்யப்பட்டு அது STC 381/2019 ஆக கோப்பிலிருந்து நடுவர் நீதிமன்றம் 1

பத்மனாபபுரத்தில் நிலுவையில் உள்ளதாகும். எனவே பல்வேறு தலைப்புகளின் கீழ் ரூ.10,00,000/– இழப்பீடு கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. 2 **வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது. மனுதாரர் மனுவில் கூறியுள்ளபடி விபத்து ஏற்படவில்லை. மனுவில் கூறியுள்ளபடி மனுதாரருக்கு எந்த வேலையும் இல்லை வருமானமும் இல்லை. மனுதாரரின் கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டது. மனுதாரர் விபத்து நடந்த விதத்தையும் காப்பீட்டு கொள்கையின் செல்லுபடித்தன்மையும் நிரூபிக்க வேண்டும். மனுதாரர் அதிகப்படியான இழப்பீடுத் தொகை கோரியுள்ளார். மனுதாரருக்கு சாதாரண காயங்கள் ஏற்பட்டன. அனைத்து காயங்களும் விரைவில் குணமடைந்துவிட்டது. மனுதாரருக்கு எந்த பண இழப்பும் ஏற்படவில்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. 1வது எதிர்மனுதாரர் 2வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை அப்படியே ஏற்றுக்கொண்டார்.

5. மனுதாரர் தரப்பில், ம.சா.1 மற்றும் ம.சா.2 விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் ஆவணங்கள் இல்லை.

6. **இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1) *மனு விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது ?*

2) *மனுதாரருக்கு யார் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் ?*

*3) மனுதாரர் கோரியுள்ளபடி இழப்பீட்டு தொகை பெற உரிமை உடையவரா ?*

7 . **<u>பிரச்சனை எண் 1:–</u>**

மனுதாரர் தனது மனுவில், 18.11.2018ம் தேதி அதிகாலை 4 மணிக்கு மனுதாரர் மார்த்தாண்டம் –நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கில் இருந்து மேற்காக இடது ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்த போது பின்னால் வந்த KL 15 A 1323 கேரளா மாநில அரசு பேருந்தை அதன் ஓட்டுநரான 1வது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி ஏற்பட்ட விபத்திற்கு அதன் ஓட்டுநரான 1வது எதிர்மனுதாரர் மீது குற்ற எண். 469/2018 என வழக்கு பதிவு செய்யப்பட்டு STC. 381/2019 ஆக நிலுவையில் உள்ளது. 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதை காட்ட எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சியமும் ஆஜர்படுத்தப்படவில்லை. எனவே ம.சா.1 ன் சாட்சியத்திலிருந்து ம.சா.ஆ–1 முதல் ம.சா.ஆ–6 வரையிலான ஆவணங்களிலிருந்தும் 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிய வருகிறது. எனவே மனு விபத்திற்கு 1–வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவே முழு காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை எண் 1–ற்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

8. **<u>பிரச்சினை 2 :</u>**

இவ்வழக்கு வாகன விபத்தானது 1வது எதிர்மனுதாரர் KL 15 A 1323 கேரளா மாநில அரசு பேருந்தை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. 1வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் 3வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, காப்பீடு விபத்து சமயத்தில்

ஊர்ஜிதத்தில் உள்ளது தெரிய வருகிறது. எனவே 3வது எதிர்மனுதாரர் தான் மனுதாரருக்கு இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டவர் என்று பிரச்சினை எண்.3 –ற்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

9. <u>பிரச்சினை எண். 3 :–</u>

(i) <u>மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்திற்காக:</u>

விபத்தின் போது மனுதாரரின் வயது 60. விபத்தின் காரணமாக மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மையை குறித்து, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் மருத்துவர் குழு பரிசோதனை செய்து வழங்கிய ஊனச்சான்றிதழ் ம.சா.ஆ.10ன் படி 5% ஊனம் என சான்று வழங்கியுள்ளது. மனுதாரர் விபத்து சமயம் படித்துக்கொண்டிருந்தார். நீ.ம.சா.ஆ–1 ஆவணத்தின் படி மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் 5% என்றும், ம.சா.ஆ.4 காயச்சான்றிலிருந்து மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக தெரிய வருகிறது. விபத்தில் ஏற்பட்ட ஊனத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.4,000/– வீதம் இழப்பீடு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மனுதாரருக்கு பகுதி நிரந்தர ஊனத்திற்காக நீ.ம.சா.ஆ.ன் படி 5 X 4,000 = ரூ.20,000/– மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

(ii) <u>வலி மற்றும் வேதனைக்காக</u>:

விபத்தின் காரணமாக மனுதாரர் முத்து நியூரோ எலும்பு முறிவு மருத்துவமனையில் 18.11.2018ம் தேதி அனுமதிக்கப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை முடிந்து 27.11.2018அன்று விடுவிக்கப்பட்டார். மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் கொடுங்காயம் என்று ம.சா.ஆ–4 ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது. எனவே மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயம், மனுதாரர் உள்நோயாளியாக சிகிட்சை பெற்ற கால அளவுகள்

ஆகியவற்றை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.50,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

(iii) **<u>சிகிச்சையின் போது ஏற்பட்ட வருமான இழப்பீடு</u>**

விபத்தின் காரணமாக மனுதாரர் முத்து நியூரோ எலும்பு முறிவு மருத்துவமனையில் 18.11.2018ம் தேதி அனுமதிக்கப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை முடிந்து 27.11.2018அன்று விடுவிக்கப்பட்டார். இந்நிலையில் காயம்பட்ட மனுதாரருக்கு சுமார் 3 மாதங்கள் அவரது பணியை செய்திருக்க முடியாது. எனவே சிகிச்சையின் போது ஏற்பட்ட வருமான இழப்பாக மாதம் ரூ.5,000/- வைத்து 3 மாதங்களுக்கான தொகை ரூ.15,000/- ஐ வருமான இழப்பீடாக வழங்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) **<u>மருத்துவ செலவினம்</u>**:

விபத்தின் காரணமாக மனுதாரர் முத்து நியூரோ எலும்பு முறிவு மருத்துவமனையில் 18.11.2018ம் தேதி அனுமதிக்கப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை முடிந்து 27.11.2018அன்று விடுவிக்கப்பட்டார். மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவுகள் குறித்து ம.சா.ஆ.7, ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை பரிசீலனை செய்யும் போது மனுதாரர் ஷாலோம் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைக்காக தொகை செலுத்தியுள்ளார் என்பது தெளிவாக தெரியவருகிறது. எனவே ம.சா.ஆ.7 ஆவணங்களில் இருந்து ரூ.1,35,351/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**(v)** **<u>ஊட்டச்சத்து உணவிற்காக</u>**:

மனுதாரருக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டு ஷாலோம் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார். அவருக்கு அவருக்கு ஏற்பட்ட காயங்கள்

குணமாவதற்கு நல்ல ஊட்டச்சத்து வழங்கக்கூடிய உணவுகள் தேவைப்படும் என்பதால் ஊட்டச்சத்தான உணவுகள் எடுத்து கொண்ட வகையில் ரூ.10,000/– வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

(vi) **உடன் இருந்தவருக்கான செலவு**:

மனுதாரர் விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக நடக்க முடியாமல் இருந்ததால் அவருக்கு நிச்சயம் ஒருவரின் உதவி தேவைப்பட்டிருக்கும். எனவே உடன் இருந்தவருக்கான செலவு ரூ.20,000/– வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

Vii) **போக்குவரத்து செலவினம்**:

மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்று வந்ததற்கான போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/– கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

(Viii) **ஆடை அணிகலன்களுக்கு இழப்பீடு**:

மனுதாரர் விபத்தின் போது அணிந்திருந்த ஆடைகள் கிழிந்தும், இரத்தம் பட்டும் மீண்டும் உபயோகிக்க முடியாமல் போய் இருக்கும். மேலும் மனுதாரர் விபத்து சமயம் அணிந்திருந்த அணிகலன்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். எனவே ஆடை அணிகலன்களுக்கு இழப்பீடாக ரூ.2,000/– வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

10. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் மனுதாரருக்கு கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் இழப்பீட்டு தொகை வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஊனத்திற்கான செலவினம் | ரூ.20,000 /– |
| 2. | வலி மற்றும் வேதனைகளுக்கு இழப்பீடு | ரூ.50,000/– |
| 3. | சிகிச்சையின் போது ஏற்பட்ட வருமான இழப்பீடு | ரூ.15,000/– |
| 4. | மருத்துவ செலவினம் | ரூ.1,35,351/– |
| 5. | ஊட்டச்சத்து செலவினம் | ரூ.10,000/– |
| 6. | உடன் இருந்தவருக்கான செலவு | ரூ. 20,000/– |
| 7. | போக்குவரத்து செலவு | ரூ.10,000/– |
| 8. | ஆடை அணிகலன்களுக்கு இழப்பீடு | ரூ.2,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,62,351/–** |

11. எனவே மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.**2,62,351/–** மனு தாக்கல் செய்த நாள் முதல் தொகை வைப்பீடு செய்யும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடனும் மற்றும் செலவுத் தொகையுடனும் கிடைக்கத்தக்கது என்று பிரச்சனை 3–க்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

**இறுதியாக,**

1. இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு 3–வது எதிர்மனுதாரர் ரூ. **2,62,351–/–**ஐ இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டு தொகைக்கு இம்மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை வைப்பீடு செய்யும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டி மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் (சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்)

இந்தியன் வங்கி, நடப்பு கணக்கு எண் 6541018634–ல் நேரடியாக NEFT/RTGS மூலம் 3–வது எதிர்மனுதாரர் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

2. 3–வது எதிர்மனுதாரர் மேற்படி இழப்பீட்டு தொகையை மேற்கண்டவாறு வங்கியில் செலுத்திய பின்னர் வங்கி அறிவுறுத்தல் நகலை (Copy of Bank Advice) கடிதம் மூலம் இத்தீர்ப்பாயத்திற்கும், அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப உத்தரவிடப் படுகிறது.

3. மனுதாரர் இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத் தொகையில் பாதி தொகையை உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும், மீதமுள்ள பாதி தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் 3 ஆண்டுகள் வைப்பீடு செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

4. மனுதாரர் இழப்பீட்டு தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணத்தை இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றக்கட்டணம் செலுத்தும் வரை மனுதாரர் வட்டி பெற உரிமையில்லை என்றும் உத்தரவிடப்படுகிறது.

5. வழக்கறிஞர் கட்டணம் ரூ.6247/– நிர்ணயம் செய்யப்படுகிறது.

<u>**வங்கி கணக்கு விபரம்**</u>

| | | |
|---|---|---|
| வங்கியின் பெயர் | : | இந்தியன் வங்கி, தக்கலை |
| நடப்பு கணக்கு எண் | : | 6541018634 |
| IFSC Code | : | IDIB000T140 |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 05 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.06.08 16:03:44 +0530

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்/
சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

ம.சா.1 – திரு. ஈசாக்

ம.சா.2 – திரு. பிராங் அருண்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**

இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 18.11.2018 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | 18.11.2018 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| ம.சா.ஆ.3 | 18.11.2018 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| ம.சா.ஆ.4 | 18.11.2018 | தேதியிட்ட காயச்சான்று |
| ம.சா.ஆ.5 | 27.11.2018 | தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| ம.சா.ஆ.6 | 12.01.2019 | தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை |
| ம.சா.ஆ.7 | | மருத்துவ கட்டண ரசீதுகள் |
| ம.சா.ஆ.8 | | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.9 | | மனுதாரின் வங்கி கணக்கு புத்தக நகல் |
| ம.சா.ஆ.10 | | மருத்துவ குழுமம் வழங்கிய ஊனச்சான்று |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

இல்லை

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.06.08 16:03:50 +0530

சா.நீ.
பத்மநாபபுரம்